**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 7 ஆகஸ்ட் 2018

Good Food, Good Life

**பாலேடு நிறைந்த, அற்புத சுவை கொண்ட மற்றும் கல்சியத்தின் செழுமை நிரம்பிய NESTLÉ a+™ முழு ஆடை UHT பால் சந்தையில் அறிமுகம்**

*திரவ பாலுக்கு அதிகரித்து வரும் கேள்வியை ஈடுசெய்யும் வகையில், 20,000 வரையான இலங்கை பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் உயர் தர தூய பாலைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது*

புத்தம் புதிதாக அறிமுகமாகியுள்ள NESTLÉ a+™ முழு ஆடை UHT பால் தற்போது நுகர்வோருக்கு சுவை விருந்தாக அமைந்துள்ளது. பாலேடு மற்றும் அற்புத சுவை கொண்ட NESTLÉ a+™ அண்ணளவாக 20,000 வரையான இலங்கை பாற்பண்ணையாளர்களிடமிருந்து பெறப்படும் மிகச் சிறந்த பாலைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. நெஸ்லே நிறுவனம் பாலுற்பத்தித் துறையில் 150 வருடங்களுக்கும் மேலாகக் கொண்டுள்ள நிபுணத்துவ அனுபவத்தின் அனுகூலத்துடன் கிடைக்கின்ற உயர் தரம் கொண்ட இந்த உற்பத்தி, ஊட்டச்சத்தின் செழுமை, செழுமையான பாலேடு சுவை மற்றும் சௌகரியம் ஆகிய அனைத்தையும் ஒரு சேர வழங்குகின்றது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு அதிகரித்த கேள்வியைத் தோற்றுவித்து, உள்நாட்டு பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு நன்மையளிப்பதையும் NESTLÉ a+™ இனை கொள்வனவு செய்வதன் மூலமாக நுகர்வோர் உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியும்.

நெஸ்லே நிறுவனத்தின் பாலுற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் கூறுகையில்: *"பாலை மூலமாகக் கொண்ட உற்பத்திகளை 150 ஆண்டுகளுக்கு முன்னர் நெஸ்லே தயாரிக்க ஆரம்பித்திருந்த நிலையில் அந்த நிபுணத்துவ அனுபவத்தின் பயனை நாம் இன்றும் பெற்று வருகின்றோம். உற்பத்தியொன்றில் நெஸ்லே நாமம் பொறிக்கப்பட்டுள்ளமை அதன் தரத்திற்கான உத்தரவாதத்தின் அடையாளமாக அமைந்துள்ளதுடன், அதன் காரணமாக முதற்படியிலிருந்தே எமது பால் நேர்த்தியான ஒரு உற்பத்தியாக அமைவதை நாம் உறுதி செய்து வருகின்றோம். அதியுயர் தர நடைமுறைகளைக் கைக்கொண்டு பாலை உற்பத்தி செய்வதற்கான பயிற்சியை எமது அனைத்து பாற்பண்ணையாளர்களுக்கும் நாம் வழங்கி வருவதுடன், எமது நுகர்வோருக்கும் மிகச் சிறந்த உற்பத்தி கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, பாலைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை முதல் உற்பத்தியின் ஒவ்வொரு படிநிலையிலும் தரத்தைப் பேணும் முயற்சிகளை நாம் வளர்த்து வருகின்றோம். நெஸ்லே நிறுவனத்தின் மூலமாக ஏற்கனவே உலகத்தரம் வாய்ந்த பல்வேறு பால் உற்பத்திகளை எமது நுகர்வோர் பெற்றுப் பயனடைந்து வருகின்ற நிலையில், உள்நாட்டு பாலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மற்றுமொரு உலகத்தரம் வாய்ந்த உற்பத்தியை அவர்களுக்கு வழங்குவதையிட்டு மிகவும் பெருமை அடைகின்றோம்,"* என்று குறிப்பிட்டார்.

பாலில் இயற்கையாகவே கல்சியத்தின் செழுமை நிறைந்துள்ளதுடன், ஏனைய பல முக்கியமான ஊட்டச்சத்துக்களையும் அது கொண்டுள்ளது. என்புகள், சருமம் மற்றும் பற்களை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு கல்சியத்தை வழங்கும் மிகச் சிறந்த ஒரு மூலமாக இது கருதப்படுவதுடன், கல்சியத்தின் செழுமை நிரம்பிய வேறு உணவை விடவும் அனேகமான சிறுவர்களை இது பெருமளவு ஈர்ப்பதால், பெற்றோர் மத்தியில் மிகவும் பிரபலமான தெரிவாகவும் காணப்படுகின்றது. வளரும் பருவத்தில் பாலை அருந்துவதால் கிடைக்கும் நன்மைகளை வளர்ந்த பின்னர் அனுபவிக்க முடியும் என்பது திரவ பாலுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்துள்ளது. நுகர்வோர் சௌகரியத்தை நாடுவதும், குறிப்பாக சிறுவர் மத்தியில் திரவ பாலின் நுகர்வினை ஊக்குவிக்கும் முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வருவதுமே கேள்வி அதிகரிப்பிற்கான காரணங்களாகும்.

ஒப்பீட்டளவில் குறைந்த அளவு மட்டத்திலான பால் வழங்கலுடன், இலங்கையின் பாலுற்பத்தித் தொழிற்துறை வளர்ச்சியடைந்து வரும் ஒன்றாகவே காணப்படுகின்றது. எனினும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் இணைந்து நெஸ்லே மேற்கொண்டு வந்துள்ள பல்வேறு பணிகள், நெஸ்லே நிறுவனம் தயாரிக்கும் பாலை மூலப்பொருளாகக் கொண்ட உற்பத்திகளுக்குத் தேவையான அதியுயர் தரம் கொண்ட பாலை போதுமான அளவில் வழங்கும்

வகையில் இத்துறையை அபிவிருத்தி செய்ய உதவியுள்ளது. *Nespray* Fortigrow முழு ஆடைப் பால் மா, *Milo* RTD (Ready-to-Drink), *Milkmaid*, *Nespray* Nutri-Up, *Nespray* Coco-Up, *Nespray* Fortigrow Milky Biscuit, *Nestomalt* RTD, *Nescafé* RTD, மற்றும் அந்த வரிசையில் NESTLÉ a+™ முழு ஆடை UHT பால் உற்பத்தி ஆகியன அவற்றுள் அடங்கியுள்ளன.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில்: “எமது நுகர்வோர் மற்றும் சமுதாயத்திற்கு பெறுமதியை சேர்ப்பிக்கும் வகையில், எமது வியாபாரம் வளர்ச்சி காண்கையில், அதற்கமைவாக சமூகங்களையும் வளர்ச்சி காணச் செய்வது எப்போதும் எமது குறிக்கோளாக அமைந்துள்ளது. எமது நுகர்வோரின் ஊட்டச்சத்து தேவைகளை ஈடு செய்வது மட்டுமன்றி, இலங்கையிலுள்ள உள்நாட்டு பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்திற்கும் பங்களிக்கும் வகையில் மற்றுமொரு உற்பத்தியை அறிமுகம் செய்து வைப்பதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களிக்க வேண்டும் என்ற எமது நிறுவனத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தும் மற்றுமொரு உற்பத்தியாக NESTLÉ a+™ அமையப்பெற்றுள்ளது,” என்று குறிப்பிட்டார்.

பால்-மாவட்ட மாதிரியை நடைமுறைப்படுத்தி, உள்நாட்டுப் பாலின் உற்பத்தி அளவு மற்றும் தரத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் மற்றும் உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களுடன் இணைந்து செயற்படும் வேலைத்திட்டத்தை 1980 களில் நெஸ்லே நிறுவனம் ஆரம்பித்திருந்தது. நிறுவனம் தற்போது அண்ணளவாக 20,000 பாற்பண்ணையாளர்களுக்கு கிரமமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப மற்றும் நுண்கடன் உதவிகள், நடமாடும் கால்நடை சிகிச்சை மையங்கள், பால் கறக்கும் கொள்கலன்கள் மற்றும் ஏனைய வளங்களை வழங்கி வருகின்றது. பாற்பண்ணையாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பாலை முறையாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் குளிரூட்டல் மையங்கள் (பாலின் தரம் கெடாது பேணிப் பாதுகாப்பதற்கு) போன்ற அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை ஸ்தாபிப்பதற்கும் நிறுவனம் கணிசமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. உயர் தரம் கொண்ட உள்நாட்டுப் பாலை சேகரித்து, அவற்றை உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் அதியுயர் தரம் கொண்ட ஊட்டச்சத்து நிரம்பிய பல்வேறு உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குவது மட்டுமன்றி, உள்நாட்டு பாற்பண்ணையாளர்கள் தமது வியாபார முயற்சிகளை வளர்ச்சி பெறச் செய்து, தமது குடும்பங்களுக்கு உதவும் வகையில் ஒரு உயிர்நாடியாகவும் நெஸ்லே நிறுவனத்தின் பணிகள் அமைந்துள்ளன.

---